**செ.வெ. எண்: 18** **நாள்: 06.01.2012**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (6.1.2012) தலைமைச் செயலகத்தில், அணைக்கரை–கும்பகோணம் சாலையில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே 6 கோடியே 21 லட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டுள்ள பாலத்தையும், கீழணை மதகுகளையும் திறந்து வைத்தார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், அணைக்கரை–கும்பகோணம் சாலையில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே 1836–ஆம் ஆண்டு பாலத்துடன் இணைந்த கீழணைக் கட்டப்பட்டது. கனரக போக்குவரத்து காரணமாகவும், பலமுறை வெள்ளப் பெருக்கை எதிர்கொண்டதன் விளைவாகவும், இப்பாலம் சேதமடைந்ததால் போக்குவரத்து தடை செய்யப்பட்டு பாலம் மூடப்பட்டது.

இந்நிலையில் இப்பாலத்தை சீரமைத்து, இப்பாலத்தின் வழியாக சீருந்து, பேருந்து மற்றும் இதர வாகனங்கள் செல்வதற்கு வசதியாக, சேதமடைந்து பலவீனமாக இருந்த பாலம் 4 கோடி ரூபாய் செலவிலும், நீண்ட காலமாக சீரமைக்கப்படாமல் இருந்த பாலத்துடன் இணைந்த கீழணை மதகுகள் 2 கோடியே 21 லட்சம் ரூபாய் செலவிலும், மொத்தம் 6 கோடியே 21 லட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அணைக்கரை–கும்பகோணம் சாலையில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே சீரமைக்கப்பட்ட பாலம் மற்றும் கீழணை மதகுகளை இன்று திறந்து வைத்தார்கள்.

இப்பாலத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்ததன் மூலம், இதுநாள் வரை கூடுதலாக 50 கிலோ மீட்டர் தூரம் சுற்றிப் பயணம் செய்த பொதுமக்களுக்கு தற்போது பயண தூரம் குறைந்துள்ளது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், பொதுப்பணித் துறைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 6.1.2012